STC NO.258/2023 DATE: 18-06-2025

P.W.-1 அய்யனார்

(எதிரி ஆஜர்.)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

(1) எனது மனைவி முனீஸ்வரி எதிரிக்கு உறவினர் ஆவார். எதிரி என் மனைவி முனீஸ்வரியிடமிருந்து சங்கையா என்பவர் மூலம் 2 முறை தலா 1 இலட்சம் வீதம் 2 இலட்சம் கடன் வாங்கினார் என்றால் சரிதான். அவ்வாறு கடன் பெறும்போது எதிரியிடம் கடன் உறுதிச்சீட்டு எதுவும் எழுதித்தரவில்லை என்றால் சரிதான். மேற்படி கடனிற்கு மாதந்தோறும் வட்டித்தொகையினை எதிரி செலுத்திவந்தார் என்றால் இல்லை. எதிரி எந்த தேதியில் மேற்படி கடனைப் பெற்றார் என்றால் 13-07-2021 ஆம் தேதி கடன் பெற்றார். மேற்படி கடனிற்கு வட்டி 2 சதவீதம் ஆகும். எதிரி அசலையும் வட்டியையும் கொடுக்கவில்லை என்றால்தான் எதிரி மீது சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றால் சரியல்ல, புகார் அளிக்கவில்லை. சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தினரை விசாரித்தால் மேற்படி கடன் வகைக்கு நான் புகார் அளித்துள்ளேனா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். என் மனைவி சிவகாசி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் மேற்படி கடனை எதிரியிடமிருந்து திரும்ப கேட்டு புகார் மனு கொடுத்தார் என்றாலும் அதனை இந்த வழக்கிற்காக மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி புகார் தொடர்பாக சிவகாசி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளரை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து இரண்டு காசோலைகளை சிவகாசி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் பெற்று என் மனைவியிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல, எதிரி அவரது வீட்டில் வைத்துத்தான் காசோலைகளை கொடுத்தார். காவல் நிலையத்தில் வைத்து எதிரி மேற்படி கடனிற்கு பகுதித்தொகையாக ரூ.80 ஆயிரம் என் மனைவியிடம் கொடுப்பதற்கு சம்மதம் தெரிவித்தார் என்றும், நாங்கள் ரூ. 2 இலட்சம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி ரூ.80 ஆயிரத்தை பெற மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

(2) கடன் தேதியிலிருந்து காசோலைதேதி வரை வட்டி சம்மந்தமாக வழக்கு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி வாங்கிய கடன் தொகைக்கு வட்டித்தொகையை சரியாக செலுத்தி

வந்தார் என்பதால்தான் எதிரியிடம் கடன் தொகைக்கு மட்டும் இரண்டு காசோலைகளை காவல் நிலையத்தில் வைத்து பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.–1 காசோலையானது யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் எதிரிதான் பூர்த்தி செய்து கொடுத்தார். காவல் நிலையத்தில் வைத்து எதிரி ம.சா.ஆ.–1 காசோலைகளில் (இரண்டு எண்ணிக்கை) கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார் என்றும், மற்ற விவரங்கள் வேறு நபர்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல, எதிரி தான் காசோலைகளை பூர்த்தி செய்து கொடுத்தார்.

(3) எதிரி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்பதால் எதிரி என்னிடம் காசோலைகளை வழங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் தான் கடன் பெற்றார். எனக்கும் எதிரிக்கும் இடையே நேரடியாக சட்டப்படியான வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல, நான் சங்கையா மூலமாகத்தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். சங்கையாவை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். எதிரி என் மனைவியிடம் பெற்ற கடனுக்கு நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல, நானும் என் மனைவியும் சேர்ந்துதான் எதிரிக்கு கடன் கொடுத்தோம். எதிரிக்கும், எனக்கும் எந்த தொடர்பு இல்லை என்பதால் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கவேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** :– இல்லை.